www.tamilarangam.net

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

# ஓரடி முன்னே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரூபா 20/-

# உட்புகுமுன்

'sooriyan.com' இற்கு நன்றி!

'சூரியன். கொம்'என்பது ஒரு இணையச் சஞ்சிகை. கொழும்பு மாநகரிலிருந்து வெளிவந்தது. வாராந்தரி. இதன் முதலாவது இதழ் 01-03-2000 இல் மலர்ந்தது. சஞ்சிகையின் ஆசிரியர் பூ. சீவகன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க 'ஓரடிமுன்னே' எனும் பெருந்தலைப்பின் கீழ் வாராந்தம் வெவ்வேறு உபதலைப்புகளில் நானும் அதில் எழுதினேன். சொந்தப்பெயரிலேயே எழுதி வந்தேன். 'ஓரடி முன்னே' இப்பொழுது உங்களுக்கும் சொந்தம்.

இனி, விமர்சன வேளை..............

**தோழமையுடன்**
**க. தேவதாசன்**
**01-07-2000**



**K.Thevathasan,**
**2/2, Rodrigo Lane,**
**Dehiwela,**
**Sri Lanka.**

***PUBLISHED BY :***

**MARXIST INTERNATIONAL SCHOOL**

# 1

# ஓரடி முன்னே

**sooriyan .com இல் முதலாவது வாரம் இது வெளியிடப்பட்டது.**

'கொழும்பு; கொள்ளுப்பிட்டி ; கடற்கரையோரக் கல்யாண மண்டபம்; 27-02-2000 ஞாயிற்றுக்கிழமை; பிற்பகல் 5.00 மணி; தமிழரின் இன்றைய நிலைபற்றியொரு மந்திராலோசனைக் கூட்டம்.'

தகவலறிந்ததும் அழையாவிருந்தாளியாக அங்கே சென்று அமர்ந்து கொண்டேன். உயர்நிலைச் சமூகத்தவர், ஆண்- பெண் அடங்கலாகச் சுமார் 40 தமிழர் இன்றைய பிரச்சினையை ஆங்கிலமொழியில் அலசி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். 'நல்ல சந்திப்பு' என நம்பிப்போன எனக்குப் பெருத்த ஏமாற்றம். 'சுதந்திரம்' பற்றி அங்கு பேசப்படவில்லை. 'பாதுகாப்பு' பற்றியே பேசப்பட்டது. 'தமிழர் பாதுகாப்பு' என்று ஆரம்பித்து 'தங்கள் பாதுகாப்பு' பற்றிப் பேசி முடித்தார்கள்.

"சிந்தித்தால் சிரிப்பு வரும்
மனம் நொந்தால் அழுகை வரும்........"

கொஞ்ச நாளாகவே எனக்கு ஒரே குழப்பம். எமது சிந்தனைப்போக்குச் சரியா? நாம் போகும் பாதை சரியா? தனிமனிதர், சமூகம், இனம், வர்க்கம், அரசு இவையெல்லாம் தனித்தனியாக 'ஓரடி முன்னே' வருவதும் சிலகாலம் கழித்து 'ஈரடி பின்னே' போவதும் இயல்பாகிவிட்டது. இவற்றை ஆய்வுக்குட்படுத்தாதவரை எங்கும் எதிலும் ஒவ்வோரடியாக முன்னே வைத்து முன்னேறுவதென்பது கனவு.

## தமிழர் தரப்பிலிருந்து சிலவற்றைப் பார்ப்போம்:

1. அன்று தமிழினச் சுதந்திரப் போராட்டம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றிய கொழும்பு மாநகரில் இன்று பாதுகாப்புப் பற்றி மட்டுமே சிந்திக்கப்படுகிறது - அதுவும் பயத்துடன்.

2. 1972 இல் திருகோணமலை நகரில் 35 இலட்சம் தமிழரின் விடுதலைக்கான பிரகடனம் செய்யப்பட்டது. 28 வருடங்களின்பின் இன்று சுமார் 10 இலட்சம் தமிழரின் விடுதலைக் குரலாக இது குறுகிவிட்டது.

3. அன்று 'இனத்தின் சுதந்திரம்' கேட்டுப்போராடிய தமிழ் இயக்கங்கள் இன்று 'இலங்கையின் சமாதானம்' கோரிப்போராடும் கட்சிகளாகக் காட்சிதருகின்றன.

www.tamilarangam.net

4. அன்று பல்கலைக்கழகத்தெரிவில் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டபொழுது, தமிழரின் உயர்கல்வி நசுக்கப்படுவதை எதிர்த்துப் போராட்டம் வெடித்தது. இன்று ஆரம்பக்கல்வியே மறுக்கப்பட்ட நிலையில் பல்லாயிரம் தமிழ்ப்பாலகர் பரிதவிக்கின்றனர்.

5. தென்னிலங்கையில் தமிழரைக்கண்டபடி கைதுசெய்வதையும் விசாரணையின்றிப் பலகாலம் தடுப்புக்காவலில் வைத்திருப்பதையும் எதிர்த்துப் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் பற்பல குரல்கள் ஓங்கிஒலித்தன. ஆனால் இன்று ஊருராக ஊரடங்குச் சட்டம்போட்டு ஆயிரமாயிரமாகத் தமிழர் கைது செய்யப்படுகிறார்கள்.

## ஆளுந்தரப்பிலிருந்து சிலவற்றைப் பார்ப்போம்:

1. 'பண்டா- செல்வா ஒப்பந்தம்' செய்யப்பட்டபொழுது "அதிகம் வழங்கப்படுகிறது" எனக் கூக்குரலிட்டு அதை எதிர்த்தவர்கள், பின் அடிசறுக்கிவந்து "இலங்கை இந்திய ஒப்பந்தம்" (மாகாண சபைச்சட்டம்) எழுத நேர்ந்தது. அவ்வாறே, 'டட்லி - செல்வா ஒப்பந்தம்' செய்யப்பட்டபொழுது "அதிகம் வழங்கப்படுவதை நாமும் அனுமதிக்கமாட்டோம்" என எதிர்த்தெழுந்தவர்கள், இன்று 'பிராந்தியங்களின் ஒன்றியம்' பற்றிப்பேசும் நிர்ப்பந்தநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

2. குறுகிய கால யுத்த நிறுத்தத்தின் பின்னர் 1995 இல் மீண்டும் யுத்தம் ஆரம்பித்தபொழுது, "புலிகளின்றிச் சமாதானத்தைச் சாதித்துக்காட்டுவேன்" என்றார் ஜனாதிபதி சந்திரிகா. "முடிந்தால் முயற்சித்துப் பார்க்கட்டும்" என்றார் புலிகளின் தலைவர் பிரபாகரன்.'சூரியக்கதிர்', 'வெற்றி நிச்சயம்' என்று பல்வேறு பெயர்களில் சமாதானத்திற்கான யுத்தம் கடந்த ஐந்து வருடங்களாக முன்னெடுக்கப்பட்டது. பல்லாயிரம் படைவீரரைப் பலிகொடுத்து, பல்லாயிரம் கோடி ரூபாவை விரயமாக்கி இறுதியாக இன்று, "புலிகளுடன் பேசாமல் சமாதானத்தை அடையவே முடியாது" என்ற செய்தியைப் பகிரங்கப்படுத்தியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா.

## சிங்களவர் தரப்பிலிருந்து உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம :

1. தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் சிங்கள அமைப்புகள் சில 'புதிய இடதுசாரி முன்னணி' எனும் பெயருடன் 1997 இல் கொழும்பில் ஒன்றிணைந்தன. இம் முன்னணியைத் தமிழர் மெல்ல மெல்ல நம்ப ஆரம்பித்தபொழுது இதன் தலைவர்கள் அடுத்த தேர்தலை மட்டுமே நம்பியிருந்தார்கள். போராட்ட வேலைத்திட்டமில்லாத இம்முன்னணி உருவான இரண்டு வருடத்திலேயே உடைந்து உருக்குலைந்தது. தமிழர் நம்பிக்கெட்டனர்.

மேலே தந்தவை சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே. பொதுவாக எத்துறையிலும் ஓரடி முன்னே வந்து ஈரடி பின்னே போவதையே காண முடிகிறது. தத்துவமும் நடைமுறையும் இரண்டற இணையும்பொழுது தவறு நேர்வதற்கான சாத்தியம் அற்றுப்போகும். தத்துவமென்பது நேற்றைய நடைமுறையிலிருந்து பெற்ற அனுபவத்திரட்டு என நாம் விளங்கிக்கொண்டால் இன்றைய நடைமுறையைத் தவறற்றதாக்கிக் கொள்ளமுடியும்.

நேற்று நடந்தவை பற்றி "என்ன நடந்தது? ஏன் இப்படி நடந்தது?" என்றும், இன்று "என்ன செய்யப்படவேண்டும்? எங்கிருந்து தொடங்குவது?" என்றும் நடைமுறையோடு ஒட்டி ஆராயவேண்டும். "அடுத்தது என்ன?" என்பதை'மக்களிடமிருந்து மக்களுக்கு'த் தெரிவிக்கவேண்டும்.

'யுத்தத்தின் மூலம் சமாதானம்' தோற்றுவிட்டது!
'சுதந்திரத்தின் மூலம் சமாதானம்' இனி வெல்லுமா?

வெவ்வேறு உபதலைப்புகளில் வாராந்தம் தொடர்ந்து ஆராய்வோம!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 2

# சுய நிர்ணயம்

**sooriyan .com இல் இரண்டாவது வாரம் இது வெளியிடப்பட்டது.**

‘சூரியன். com’ ஆரம்பித்த அதேகணம்முதல் சூரியன். com பற்றிய சூடான விமர்சனமும் கொழும்பில் ஆரம்பித்துவிட்டது. உதாரணத்துக்கு ஒன்று: “வடக்கு-கிழக்கில் அடிப்படைக்கல்வியையே இழந்து தவிக்கும் அறுபதாயிரம் மாணவர்கள் பற்றிச் சிந்திக்காமல் இணையச் சஞ்சிகை பற்றிச் சிந்திப்பதா இன்றைய தேவை?” இவ்வாறு நவசமசமாஜக்கட்சியின் அரசியற்குழு உறுப்பினர் ஜனகன் என்னிடம் கேட்டார்.

இலங்கையின் தலைவிதி இலங்கைக்கு வெளியே நிர்ணயம் செய்யப்படுகின்ற அரசியல் வரலாறு இனித்தொடராதிருக்கவும், ஆக்கிரமிப்பு அரசியலை அடையாளங்கண்டு சுதந்திர அரசியலை வளர்த்தெடுக்கவும் இணையச் சஞ்சிகை இணையற்ற பங்காற்றமுடியும். இனச்சுதந்திரத்தை வேண்டிநிற்கும் இலங்கைத் தமிழரின் இன்றைய நிலையை இலங்கைக்கு வெளியே மிகவேகமாகக் கொண்டு செல்லவும் ‘இணையம்’ என்கின்ற ஊடகம் மிகச்சிறப்பான முறையில் பணியாற்றமுடியும்.

இந்திய ‘கல்கி ‘ வார-சஞ்சிகையின் 2000 ஜனவரி 02 ம் திகதிய இதழின் ஆசிரியர் தலையங்கம் படித்தேன். “புலிவாலைப் பிடிக்கலாமா?” என்பது இதன் தலைப்பு. விடுதலைப்புலிகள், வெறுக்கத்தக்க வன்முறையாளர் எனவும்; விடுதலைப்புலிகளை அனுசரித்துப் போகவிரும்பும் தமிழகத்தலைவர்கள், தேசத்துரோகிகள் எனவும் இதில் வர்ணிக்கப்பட்டுள்ளனர். “மீண்டும் அதிபரான சந்திரிகா குமாரதுங்கவுக்குச் சவால்கள் காத்திருக்கின்றன. அவற்றைப் புதிய பலத்துடன் சந்திக்க அவரை வாழ்த்துவோம்” என்ற வாசகத்துடன் அவ்வாசிரியர் தலையங்கம் முடிகிறது.

அதே ‘கல்கி‘ இதழில் கடந்த நூற்றாண்டில் உலகில் நடந்த முக்கிய சம்பவங்கள் ஆண்டுவாரியாகத் தரப்பட்டிருக்கின்றன. அதில் 1977, 1983 களில் இலங்கையில் தமிழருக்குகெதிராக இடம்பெற்ற இனவெறி வன்செயலை, 1987 இல் இலங்கைக்கு இந்திய இராணுவம் வந்ததை, கொழும்பில் அரசவிமானப்படை அணிவகுப்பு மரியாதையின்பொழுது ராஜீவ்காந்தியின் தலையில் அடிவிழுந்ததைப் பற்றியெல்லாம் மூச்சுவிடாத ‘கல்கி’ 1991 இற்குப்பின் நடந்தவற்றை மட்டும் மறக்காமல் குறித்துக்காட்டியுள்ளது:

1991 : ராஜீவ் படுகொலை.
1993 : இலங்கைப் பிரதமர் பிரேமதாச மனித வெடிகுண்டுச் சதியில் படுகொலை.
1994 : சந்திரிகா குமாரதுங்கா ஸ்ரீலங்கா ஜனாதிபதி.
1999 : ஸ்ரீலங்காவில் தேர்தல் பிரசாரத்தின்பொழுது மனித வெடிகுண்டுதாக்கி ஜனாதிபதி சந்திரிகா படுகாயம். தேர்தலில் வெற்றி ...............

இந்தியாவிடம் இன்னும் எதையோ எதிர்பார்க்கும் எம்மக்கள் இந்திய மத்திய அரசின் கொள்கை மற்றும் நோக்கத்தைப் புரிந்து கொள்ள ‘கல்கி’யைப் புரிந்துகொண்டாலே போதும். இந்திராகாந்திக்குப்பின் இந்திய வெளியுறவுக்கொள்கை தடம் மாறிப் பயணித்து வருகிறது. மத்தியில் கட்சிகள் மாறிமாறி ஆட்சிபீடமேறினாலும் அவற்றின் ஆளுங்கொள்கை அடிப்படையில் ஒன்றே. எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ‘புலித்தடைச் சட்டம்’ நீடிக்கப்பட்டு வருவது இதற்கு நல்ல

www.tamilarangam.net

உதாரணம். புலித்தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ள அமெரிக்க அரசுத்தலைவரும் புலித்தடைச்சட்டத்தைக் காலநீடிப்புச் செய்துள்ள இந்திய அரசுத்தலைவரும் நீண்ட இடைவெளிக்குப் பின் நியூடெல்லியில் சந்தித்து நட்புப்பாராட்டவுள்ளனர் என்பது ஒரு மேலதிக தகவல்.

"யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியலே............"

கொழும்பு மாநகரில் இவ்வாரம் அரசியல் சுவரொட்டிகள் எதுவும் ஒட்டப்படவில்லை.08-03-2000 சர்வதேச மகளிர் தினமாதலால் பெண் விடுதலைச் சுவரொட்டிகள் மட்டுமே அங்கொன்றும் இங்கொன்றுமாய் காட்சியளிக்கின்றன. சர்வதேச மகளிர் தின நினைவாக கொழும்பு, வெள்ளவத்தையிலமைந்துள்ள 'பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன' மண்டபத்தில் கடந்த (மார்ச்) 03ம் திகதி ஆய்வரங்கு ஒன்று நடைபெற்றது. இந்நிறுவனப்பணிப்பாளர் கலாநிதி செல்வி அவர்கள் தமது ஆய்வுரையில் , அரசு அடுத்தமாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள 'பெண்கள் பட்டயம்' பற்றிக்குறிப்பிட்டு, கடந்த 6 வருடங்களாகப் பெண்கள் அமைப்புகள் மேற்கொண்ட முயற்சிக்குக்கிடைத்த வெற்றி இதுவாகும் எனப் பெருமை பேசினார். உண்மையில் 'பெண்கள் பட்டயம்' பெண்களைக் காக்குமா? பெண்களுக்கு நீதிவழங்குமா? இதற்குப் பதில் தேடினேன். கடந்த (மார்ச்) 05ஆம் திகதி வெளியான பத்திரிகைச்செய்தி ஒன்று என் கவனத்தை ஈர்த்தது:

"புங்குடுதீவைச் சேர்ந்த சாரதாம்பாள் என்ற இளம் தாயைக் காமவதைக்குட்படுத்திக் கொலைசெய்த சந்தேக நபர்களைக் கைது செய்வதற்குப் போதியளவு ஆதாரங்கள் இல்லை என்று குற்றப் புலனாய்வுப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்."

சாரதாம்பாள் விவகாரத்தில் 'பெண்கள் பட்டயம்' என்ன செய்யப்போகிறது? இதில், அரசு தொடர்ந்தும் மௌனம் சாதித்தால் கலாநிதி செல்வியும் பெண்கள் அமைப்புகளும் என்ன செய்யப் போகின்றனர்?

இறுதியாக, அப்பாவிகள் சார்பாக அரசிடம் ஒரு கேள்வி: போதியளவு ஆதாரமில்லாமல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் அப்பாவி இளைஞர்களை நூற்றுக்கணக்கில் கைது செய்து, விசாரணையின்றிப் பலவருடம் தடுப்புக்காவலில் வைத்திருக்கமுடியுமென்றால், சாரதாம்பாள் விவகாரத்தில் மட்டும் ஏன் அது முடியாது?

# 3

# எண்ணித் துணிக

**sooriyan .com இல் மூன்றாவது வாரம் இது வெளியிடப்பட்டது.**

கடந்த (மார்ச்) 8ம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்ட நாள். கொழும்பில் கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்குக்குறைவேயில்லை. இவற்றுள், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்த கூட்டமொன்று என்னைப் பலவாறு சிந்திக்கத்தூண்டியது.

'ஜனதா விமுக்தி பெரமுண' (ஜே.வி.பி.) யின் மகளிர் அணி நடாத்திய கூட்டமே அது. மண்டபம் நிறைந்த கூட்டம். சமுகமளித்திருந்த சுமார் ஆயிரம்பேரில் முக்காப்பங்கினர் பெண்கள். அதுவும் துடிப்புமிக்க இளம்பெண்கள். தமிழ்பேசுவோர் அதிகம் வாழும் இடமொன்றில், அதிலும் குறிப்பாகத் தமிழ் மண்டபமொன்றில் ஜே.வி.பி. யினர் கூட்டம் நடாத்தியது சற்று மாறுதலானது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டுமல்ல, சிந்தனைக்குரியதும்கூட. சரஸ்வதி மண்டப நுழைவாயிலில் தனித்தனியாகத் தமிழிலும் சிங்களத்திலும் வரையப்பட்ட பெரியளவிலான கவிதைப் பலகைகள் காட்சிதந்தன. சற்றுச் சந்தோசமான உணர்வுடன் உள்ளே நுழைந்தேன். மேடைமீது பார்வையைப் படரவிட்டேன். ஆஹா....அருமை! மும்மொழிகளுக்கும் சமவாய்ப்பு. பின்னணிப்பதாகையில் தமிழ் கம்பீரமாக நின்று கண்சிமிட்டியது. ஆனாலுமென்ன, பேச்சாளர்வரிசையில் ஒரு பற்றாக்குறை இருப்பதைக் கண்டேன். மேற்கத்தேயப்பெண்கள் இருவர், சிங்களப்பெண்கள் இருவர், முஸ்லிம்பெண் ஒருவர் இருந்த அந்த மேடையில் தமிழ்ப்பெண்ணைக் காணமுடியவில்லையே, ஏன்? இங்குதான் உண்மை உதயமாகிறது. “எமது 34 வருட வரலாற்றில் ஒரு தமிழ்ப்பிரஜைக்குக்கூட தீங்கிழைத்தது கிடையாது. எங்கும் எதிலும் தமிழுக்கும் தமிழருக்கும் சமவாய்ப்பளிப்பதே எமது கொள்கை” என்றெல்லாம் பிரசாரம் செய்யினும் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை ஜே.வி.பி. ஏற்றுக் கொள்ளாதவரை, கொடிய யுத்தத்தை ஜே.வி.பி. எதிர்த்தெழாதவரை தமிழ் மக்களின் நம்பிக்கையைப்பெற ஜே.வி.பி. யினால் முடியவே முடியாது.

இவ்வாரம் கொழும்புச் சுவர்களை நாவகைச்சுவரொட்டிகள் ஆக்கிரமித்து நிற்கின்றன. ‘இயேசு ஜீவிக்கிறார்’ அமைப்பின் விதவிதமான பலவண்ணச்சுவரொட்டிகள். விருது பெற்ற புதிய சிங்களச்சினிமாப்படம் ‘சரோஜா’ வின் சுவரொட்டி. “சந்திரிகா- ரணில் - நோர்வே இரகசியப் பேச்சின் உள்நோக்கம்” பற்றி மார்ச் 16ஆம் திகதி ‘ஹைட் பார்க்’ மைதானத்தில் ஜே.வி.பி. நடத்தவிருக்கும் கூட்டம் பற்றிய சுவரொட்டி. நான்காவதாக சூடான சுவரொட்டியொன்று. “புலிகளுடன் பேச வேண்டாம்” எனக்கோரும் சிங்களத் தீவிரவாதிகளின் சுவரொட்டி அது.

“......போகும் பாதை தவறானால்
போடும் கணக்கும் தவறாகும்.........”

இலங்கைப் பாராளுமன்றம் இவ்வருடத்துக்கான வரவு-செலவுத்திட்டம் மீது விவாதித்துக் கொண்டிருக்கிறது. வழக்கம்போல இவ்வருடமும் யுத்த வரவு-செலவுத்திட்டம்தான் என்றாலும் ஒரு வித்தியாசம் உண்டு. கடன் வழங்கும் நாடுகளும் உலகவங்கியும் கைவிரித்துவிட்ட நிலையிலும்கூட வெற்றுத்தாள் மீதான விவாதம் நாள்கணக்காக நடைபெறுகிறது. அந்நியப் படையை அழைப்பதன் அவசியம் பற்றியெல்லாம் பாராளுமன்றத்தில் பேசப்படுகிறது. கெஞ்சிக் கூத்தாடிப் பிச்சைபெற்றேனும் புதிதாகப் படைக்கு ஆள்திரட்டுவதையும் யுத்த தளபாடக் கொள்வனவையும் அரசு அதிமுக்கியமாகக்கருதுகிறது.

இதையொட்டிச் சிலதினங்களுக்குமுன் புலிகளால் மட்டக்களப்பில் பிரசுரம் ஒன்று விநியோகிக்கப்பட்டுள்ளது. “அரசாங்கம் சுதந்திரம் தருமா? சுதந்திரம் சும்மா வருமா?” என்ற கேள்விகளைப் புலிகள் எழுப்பியுள்ளனர். அரசு இரட்டைவேடம் போடுவதாக, அதாவது சமாதானத்தை உதட்டிலும் யுத்தத்தை உள்ளத்திலும் அரசு கொண்டிருப்பதாகப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கொழும்பில் அலரிமாளிகையில் நடைபெற்ற மகளிர்தினக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா ‘பெண்ணின் பெருமை’ பற்றிப் பேசுகையில் குறிப்பிட்ட ஒரு விடயம் என்னைக் கவலை கொள்ளவைத்தது. “இலங்கையில் பெண்கள் சகலதுறைகளிலும் முத்திரை பதித்து முன்னேறிவருகிறார்கள். பொலிஸ் மாஅதிபராகவும் படைத்தளபதியாகவும்கூட பெண்கள் உயரமுடியும்.” அவர் இவ்வாறு குறிப்பிட்டதைச் சமாதானத்தின் அறிகுறியாகக் கொள்ளலாமா? அல்லது அவரையுமறியாமலேயே அவர் யுத்தசிந்தனாவாதியாக மாறிவிட்டாரா?

கடந்த (மார்ச்) 09 ம் திகதி ‘அரசியல் அதிசயம்’ ஒன்று கொழும்பில் நடந்துவிட்டதாகப் பலர் நம்புகின்றனர். நம்பி நம்பிக் கெட்டவர்களின் புதிய நம்பிக்கை இது. ஜனாதிபதி சந்திரிகாவும் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்துவிட்டனர், எதையோ சாதித்துவிட்டனர் என்ற வெற்றுக் கோஷங்கள் விண்ணதிர முழங்கிக்கொண்டிருந்தபொழுது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுநாள் (மார்ச் 10) மாலையில் யதார்த்தம் அரங்கேறியது. யாருமே எதிர்பாராவகையில் பொரளை அருகே புலிகள் பாய்ந்து தாக்கினார்கள். ஆளுங்கட்சிக்குப் பயங்கர அதிர்ச்சி. அரசியல் ஆருடவாதிகளுக்குப் பெருத்த ஏமாற்றம். நோர்வேயின் தலையீடு புலிகளுக்குச் சார்பானது என ஆர்ப்பாட்டம் நடாத்திய சிங்களத் தீவிரவாதிகளுக்கு நெற்றியடி. தாக்குதலின் பின்னணி, முன்னணி பற்றியும் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றியும் ஆராய்ந்து கொண்டிருக்கிறது அரசு. உலகத்தில் எது எங்கு நடந்தாலும் அவசர அவசரமாக அறிக்கைவிடும் அமெரிக்காவோ ஆச்சரியப்படும் விதத்தில் அமைதி காக்கிறது.

அடுத்தது என்ன?

# 4

# சோறா? சுதந்திரமா?

| |
|---|
| sooriyan .com இல் நான்காவது வாரம் இது வெளியிடப்பட்டது. |

ஈழத்தமிழர் வாழ்வில் வேதனைகள் ஆயிரம். சோதனைகள் ஆயிரம். இது தொடர்கதையாகி விட்டது. இன்னும் எத்தனைகாலம் இது நீடிக்கும்? இதை முடித்துவைக்கப்போகிறவர் யார்?

மக்களா? விடுதலை இயக்கமா? அரசா? அந்நியரா?.

தமிழ் மக்களின் விருப்பம் எது? சமாதானமா? சமவாய்ப்பா? சுதந்திரமா? கொழும்பில் பலரிடம் இக்கேள்விகளை விட்டெறிந்தேன். குழப்பமான பதிலே பலரிடமிருந்து வருகிறது. இக்குழப்பத்திற்குப் பல காரணங்கள். தம்மைச்சுற்றி என்ன நடக்கிறது என்பதையும் அதற்கான முழு விளக்கங்களையும் அறியப் பலரும் துடிக்கிறார்கள். வேண்டிய - போதிய தகவலைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். மக்களின் அறிவுத்தேடல் அதிகரித்துள்ளது. மிக அண்மைக்காலமாகக் கொழும்பில் நடக்கும் கூட்டங்களே இதற்குச் சிறந்த சான்று. அரசியல் கூட்டமாகட்டும், இலக்கியக் கூட்டமாகட்டும், மொழியியல் கூட்டமாகட்டும், புத்தக வெளியீட்டுவிழாவாக இருக்கட்டும் “ஈழத்தமிழரின் இன்றைய வாழ்வு” தொடர்பான தலைப்புடன் அது நடத்தப்படுமானால் அரங்கு நிறைந்த கூட்டத்தை அங்கெல்லாம் காணமுடிகிறது. அரசியல் கூட்டங்கள் அடிக்கடி நடாத்தப்படவேண்டும் என்பது மக்களின் அவா.

அரசியல் கூட்டங்களிற்குத் தமிழ் மண்டப உரிமையாளர்கள் கதவடைப்பு அல்லது சுயதடை விதித்துத் தமது அரசாபிமானத்தை அல்லது பயந்தாங்கொள்ளித்தனத்தைத் திறம்பட நிரூபித்து வருகிறார்கள் என்பது பிந்திய செய்தி.

“மக்கள் சக்தியற்றவர்கள். மக்களுக்கு எதுவும் தெரியாது. மக்களால் எதுவும் முடியாது. மக்களைக் காப்பாற்ற யாராவது ஓடோடி வாருங்கள்” என்று கொழும்புத் தமிழ்த்தினசரியொன்றின் ஆசிரியத் தலையங்கத்தில் திரும்பத்திரும்ப எழுதப்படுகிறது. மக்களின் ஆளுமையை மறுதலித்து மக்கள் சக்தியை மழுங்கடிக்கச்செய்யும் இந்த மனோவசிய எழுத்தை ஊடகம் கைவிடவேண்டும். ‘மக்கள் சக்தியே வரலாற்றைத் தீர்மானிக்கும் மகத்தான சக்தி’ என்ற உண்மையை ஊடகம் ஊன்றி எழுதவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தியது ஏன்? எப்பொழுது? இக்கேள்விக்கு அரசியல்வாதிகள் பல்வேறு பதில் தருகின்றார்கள். தத்தமது நிலையை நியாயப்படுத்துவதே அப்பதிலின் நோக்கம். உண்மையான பதில் என்ன?

அரசியல் அரங்கில் தனித்தியங்கிவந்த தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய மூன்று பெரும் கட்சிகளும் 'தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) என்ற பெயருடன் கூட்டணி சேர 1972 ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'புதிய அரசியலமைப்பு' காரணமாகியது. கூடவே அன்றிருந்த அரசு பல்கலைக்கழகத் தேர்வில் தரப்படுத்தல் முறையையும் கொண்டுவந்தது. ஒன்றிணைந்த தமிழர்விடுதலைக்கூட்டணியின் பிரசார முழக்கமும் கல்வித்தரப்படுத்தலும் தமிழ் மாணவர்கள் அரசியலில் இறங்கக் காரணமாகியது. 1971 ம் ஆண்டில் கிளர்ச்சி செய்த சிங்கள இளைஞர்களை அடக்கியொடுக்கிய அதே வீர மன உணர்வுடன் தமிழர் போராட்டத்தையும் அடக்கியொடுக்கப் படைபலத்தை அரசு பிரயோகிக்க ஆரம்பித்தது. தமிழ் மாணவர்களுக்கெதிராகப் படையினர் பாய்ந்தனர். 1974 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இச்சிக்கலை இன்னும் சூடேற்றியது. 1975 ம் ஆண்டில் நடந்த காங்கேசன்துறைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் முடிவும் 1976 ம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாடுகூடி நிறைவேற்றிய வட்டுக்கோட்டைத் தீர்மானமும் தமிழ் மாணவர்களை கொந்தளிப்பு நிலைக்கு இட்டுச்சென்றன. அப்பொழுது 'அந்த' தமிழ் மாணவர்கள் தமிழ் இளைஞராகியிருந்தனர். கட்டவிழ்த்துவிடப்பட்ட அரச பயங்கரவாதம் தமிழ் இளைஞர்களை விருப்பம் போல வேட்டையாடிவந்தது. ஆய்துத்தில் நம்பிக்கைவைத்தோர் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த நிலைமாறி ஆயுதமேந்திய இயக்கம் அப்பொழுது உருவெடுத்தது. ஒரே நேரத்தில் ஒன்றுக்குமேற்பட்ட இயக்கங்கள் தோன்றின.

ஆயுதமேந்திய இத்தகைய இயக்கங்கள் யாவும் அரசை எதிர்த்துப்போராடித் தமிழினச் சுதந்திரத்தையடைவதையே இலட்சியமாகக் கொண்டு ஆரம்பித்தன. இயக்கங்களின் வளர்ச்சிப்போக்கில் இவற்றுக்கிடையே முரண்பாடுகளும் வளர்ச்சிகண்டன.

1983 ம் ஆண்டு இலங்கைத் தமிழ் இயக்கங்களுக்கு 'இந்தியக்கதவு' திறந்துவிடப்பட்டது. இந்தியாவுடன் கலந்தபின் இந்த இயக்கங்களிடையே நிலவிய முரண்பாடு நாளடைவில் பகைமுரண்பாடாக மாற்றம் பெற்றது. 1985 ம் ஆண்டில் போட்டி இயக்கங்களைப் புலிகள் தடைசெய்தனர். காலம் உருண்டோடியது. இன்று புலிகள் மட்டும் அரசை எதிர்த்துப் போரிடுவதையும் புலிகளால் தடைசெய்யப்பட்ட இயக்கங்கள் அரசை ஆதரிப்பதை அல்லது அரசை எதிர்த்துப் போராட முடியாதுள்ளதையும் காணமுடிகிறது.

E.P.R.L.F. இயக்கத்தில் 20 வருடங்களுக்கு மேலாக இருக்கும் அதன் மத்திய குழு உறுப்பினர் சிறீதரனைச் சந்தித்து இன்றைய 'போக்கு' பற்றி வினவினேன். தங்கள் இயக்கத்துக்குள் ஏற்பட்ட வெடிப்புப்பற்றி அவர் அதிகம் பேசாது புலிகள் பற்றியே உணர்ச்சியுடன் பேசினார். "சிங்களப் பேரினவாதம் இன்று உயிர்வாழ்வதற்கான பிரதான காரணி புலிகளே" எனக் குற்றஞ் சாட்டினார். அவரைப்போலவே சிந்திப்பவர்கள் இலங்கையில் மட்டுமல்ல இலங்கைக்கு வெளியிலும் பலர் இருக்கிறார்கள். புலிகளை எதிர்க்கவேண்டும் என்ற ஒரேகாரணத்துக்காக 'அரசு' பற்றிய உண்மையை இவர்கள் மறக்கலாமா? 'தமிழினச் சுதந்திரம்' என்பது முதலில் புலிகளிடமிருந்தும் இரண்டாவதாக அரசிடமிருந்தும் என்பது இவர்களுடைய நிலைப்பாடு.

1971 இல் கிளர்ச்சிசெய்த சிங்கள இளைஞர்களைத் 'தன்னினம்' என்ற சிந்தனைக்கப்பால் சுட்டுக்கொன்று அரசு தன்னைக் காத்துக்கொண்டது. அதேபோல 1987 இலும் சிங்கள இளைஞர் பல்லாயிரம்பேர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் தத்தமது ஆட்சிக்காலத்தில் அரசுக்கெதிராக எழுந்த வர்க்க அடிப்படையிலமைந்த கிளர்ச்சியை நசுக்கத் தயங்கவில்லை. ஆனால் பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்டநேரங்களில் அவற்றை எதிர்த்து எழுந்த கிளர்ச்சியை நசுக்கவோ, ஒப்பந்தத்தை அமுலாக்கவோ அரசு விரும்பவில்லை. வர்க்க விவகாரமாயிருந்தால் கிளர்ச்சியை நசுக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசைக்காப்பதும் இன விவகாரமாயிருந்தால் ஒப்பந்தத்தைக் கிழித்து அரசைக்காப்பதுமே அரசின் 'தேசிய பாதுகாப்புக் கொள்கை'. அரசைப்புரிந்துகொள்ள இது போதாதா? இன ரீதியாக மக்களைப் பிரித்தாள்வதன் மூலம் வர்க்க ரீதியாக அரசு தன்னைக் காத்து வருகிறது. அரசுத்தலைவரின் விருப்பமும் வாக்குறுதியும் எப்படியும் இருக்கலாம். ஆனால் இறுதியில் செயலுருப்பெறுவது அரசின் விருப்பம் மட்டுமே.

இதுவரை காலமும் வர்க்கக்கிளர்ச்சியிலிருந்து தன்னைக்காத்துக் கொண்ட அரசுக்கு இப்பொழுது இனக்கிளர்ச்சியிலிருந்து தன்னைக்காத்துக்கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. 17 வருட அனுபவத்தின் வாயிலாக, 'யுத்தம் முடிவில்லாதது மட்டுமல்ல, வெல்லப்படமுடியாதது' என்பதை அரசு உணர்ந்துவிட்டது. இந்நிலையில் தன்னைக்காக்க அரசுக்கு இரண்டேயிரண்டு வழிகள் மட்டுமே உண்டு. முதலாவது, அந்நிய நாடொன்றின்மூலம் அழுத்தத்தைப் பிரயோகித்து அதன் மூலமாகப் புலிகளைப் பேச்சு மேசைக்கு வரவழைப்பது. அடுத்தது, அந்நியப்படையை வரவழைத்துப் புலிகளை பலமிழக்கச்செய்வது அல்லது அழிப்பது.

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில்
அந்நியன் வந்திங்கு புகல் என்ன நீதி?"
இது பாரதியின் கேள்வி.

அரச சக்தி இப்படியென்றால் மக்கள் சக்தி எப்படி?
சோறா? சுதந்திரமா? என்ற இதே உபதலைப்பில் அடுத்தவாரமும் தொடர்வோம்.
இவ்வாரம் கொழும்புச் சுவரின் முகம் வாடிக்காணப்படுகிறது. அரசியல் சுவரொட்டிகள் புதிதாக ஏதுமில்லை.

# 5

# சோறா? சுதந்திரமா?

ஐந்தாவது வாரத்திற்காக எழுதப்பட்டதாயினும் எழுதுவதில் ஏற்பட்ட தாமதத்தினாலும் தவிர்க்கமுடியாத காரணத்தினாலும் **sooriyan. com** இல் இது வெளிவரவில்லை.

என்றும் போல இன்றும் பௌத்த உயர்பீடம் அரசியல் பேச ஆரம்பித்து விட்டது. "இலங்கையில் இனப்பிரச்சினையில்லை. பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு." இது அத்துறவிகளின் கூரிய கண்டுபிடிப்பு. பிரச்சினைக்குத் தீர்வுகாண அத்தகையவர்களின் ஆசீர்வாதம் நிச்சயம் வேண்டும் என்கிறது பௌத்த அரசு. தட்டிக் கேட்க ஆளில்லாத தைரியத்தில் இத்தரங்கெட்ட நாடகம் அரச அனுசரணையுடன் மீண்டும் இன்று அரங்கேற்றப்படுகிறது. இதற்கெனப் பௌத்த - சிங்கள அரசியற் கட்சியொன்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பலவருடங்களாக தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட வட,கிழக்கைச் சேர்ந்த மொத்தம் ஆறு தமிழ்க்கட்சிகள் கொழும்பில் முகாமிட்டு இயங்கி வருகின்றன. இக்கட்சிகள் இருப்பதைப்பார்த்தாவது அல்லது இவர்கள் பாராளுமன்றத்தில் பேசுவதைக் கேட்டாவது இனப்பிரச்சினை இங்குண்டு என்பதை பௌத்தபீடம் புரிந்துகொண்டிருக்கலாமே. அவ்வாறு புரிந்து கொள்ளும் சக்தி அவர்களுக்கு இல்லையென்றால் இத்தமிழ்க்கட்சிகளாவது இத்துறவிகளை

www.tamilarangam.net

தேடிப்போய் பக்கத்திலிருந்து புரியும் படி ஓதியிருக்கலாமே. இதில் வேடிக்கை என்னவென்றால், பௌத்தபீடம் 'பயங்கரவாதிகள்' எனச் சுட்டுவது புலிகளை மட்டுமா? அல்லது ஆயுதமேந்திய அனைத்துத் தமிழ்க்கட்சிகளையும் சேர்த்தா? தமிழ்க்கட்சிகளின் சிந்தனைக்கு இதை விட்டுவிடுகிறேன். நிற்க,

தன் சக்தியைத் தானறியாமலே வாழ்வதும் ஒரு வாழ்வா?
மக்கள் சக்தி எத்தகையது?

கடந்த சில வாரங்களாக வடக்கிலும் கிழக்கிலுமிருந்து நல்ல செய்தி கிடைத்தவண்ணமுள்ளன. ஆர்ப்பாட்ட ஊர்வலம் என்றும் மறியற்போராட்டம் என்றும் மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். வெவ்வேறு தேவைகளுக்காகப் பல்வேறு போராட்டம்.

காணாமல் போனோரின் உறவினர், பாடசாலை ஆசிரியர்,தொண்டர் ஆசிரியர், பாடசாலை மாணவர், பல்கலைக்கழக மாணவர், படைத்தள விஸ்தரிப்புப் பிரதேசத்தில் குடியிருப்போர்,உணவும் உதவியுமின்றி வாடும்மக்கள், பொதுப்பணிமன்றங்கள் என்றெல்லோரும் விழித்துகொண்டு விட்டார்கள். வாக்குறுதிகளை நம்பி மக்கள்பிரதிநிதிகளிடம் மனுக்கொடுத்து மன்றாடும் மரபை மீறி, பயந்தாங் கொள்ளித்தனத்திற்குப் பாடை கட்டித் தமக்காகத் தாமே போராட ஆரம்பித்து விட்டார்கள். சபாஷ்!

"..........தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா"

அன்று அமெரிக்காவின் சிக்காகோ நகரத் தொழிலாளர் உரிமை கேட்டுப் போராடி உயிர்த்தியாகம் செய்தனர். பலனை இன்று முழு உலகமும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. உலகெங்கும் அடிமைகளாக நடாத்தப்பட்ட உழைக்கும் மக்கள் உரிமை பெற்றனர். 'எட்டு மணிநேரவேலை' உத்தரவாதப்படுத்தப்பட்டது. மக்கள் சக்தியின் மகத்துவத்தைப் பறைசாற்ற இது ஒன்றே போதும்!

மக்கள் தம்மைத்தாமே அறிந்து கொள்ளாதவரை, தமது பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளாத வரை, தமது 'நண்பர் யார்? எதிரி யார்?' என்பதைக் கணித்துக் கொள்ளாதவரை, தமக்கு எது தேவை என்பதைத் தாமே தீர்மானித்துக் கொள்ளாதவரை மக்கள் சக்தி என்பது மாபெரும் சக்தியல்ல. மாறாக, மேற்படி விடயங்களை அறிந்தும் புரிந்தும் கணித்தும் தீர்மானித்தும் கொண்டுவிட்டால் அம் மக்கள் சக்தியே மகத்தானது. அதுவே வரலாற்றைத் தீர்மானிக்கும் சக்தி. அத்தகைய மக்கள் சக்தி துப்பாக்கிகளைத் தூள்தூளாக்கும்.பீரங்கிகளைப் பொடிப் பொடியாக்கும். அணுக்குண்டுகளைக்கூட அழித்தொழித்து அகிலத்தில் அமைதி காக்கும். சுருங்கக்கூறின், உலகில் மகத்தானது மக்கள் சக்தி மட்டுமே!

இலங்கையில் இனப்பிரச்சினை இருப்பது உண்மை. ஆயினும், எமக்கென்ன பிரச்சினை என்பதை எம்மில் எத்தனை பேர் அறிந்து வைத்திருக்கிறோம்? இருக்கக்கூடிய அனைத்துப் பிரச்சினையையும் வகைப்படுத்திப் புள்ளிவிவரத்துடன் பட்டியலிட்டு வைத்திருக்கிறோமா? தமிழினத்திற்கு இன்று எது வேண்டும்?

சோறா? சுதந்திரமா?

### சமாதானம்

வசதி படைத்த தமிழர் சிலர் மிச்சம்மீதி இருக்கும் தமது கௌரவம் மற்றும் சொத்து, சுகத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் எல்லாவற்றையும் இழந்துதவிக்கும் சாதாரண தமிழ் மக்களைச் சாட்டி அவர்களின் பெயரால் 'அவசர சமாதானம்' கோருகின்றனர். எப்படியாவது, எவர் தலையிட்டாவது சமாதானம் வந்து விடவேண்டும் என்று இவர்கள் விரும்புகின்றனர். சமாதானம் என்பது சுதந்திரத்தின் அடையாளமாம். இதை நம்பச் சொல்கின்றனர். சிலகால கட்டத்தில் சமாதானம் என்பது அடிமைத்தனத்தின் அடையாளமாகக்கூட இருக்கலாம், அல்லவா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சமவாய்ப்பு

சாதாரண சிங்கள மக்கள் இரண்டாவது சுதந்திரப் போராட்டத்திற்கு மெல்ல மெல்லத் தயாராகிவருகிறார்கள். இன்று சிங்கள இனம் வீடு, கல்வி, தொழில், சுகாதாரம், பொருளாதாரம் என்றெல்லாவற்றிலும் வாய்ப்புகளின்றி வறுமையில் வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. உண்மைநிலை இப்படியிருக்க, பௌத்த அரசினால் சுரண்டப்படும் சிங்கள இனத்தைப் போல தாமும் வாழ்வதற்கா தமிழினம் சமவாய்ப்புக் கோர வேண்டும்? சமவாய்ப்பும் ஐம்பதுக்கு ஐம்பதும் யாருக்கு வேண்டும் ? வசதி படைத்த சிங்களவர் போல வாழ விரும்பும் வசதிபடைத்த தமிழருக்கு ஒருவேளை இது தேவைப்படலாம். சாதாரண தமிழ் மக்களுக்கு இதனால் ஆகப் போவது ஒன்றுமில்லை.

## சுதந்திரம்

இருபது வருடங்களுக்கு மேலாக இன்னலையும் இழப்பையும் அனுபவித்து மனமிறுகிப்போன தமிழினத்திற்கு இன்று தேவை, இடைக்கால சுகமா? நிலையான சுதந்திரமா?

தன்னடையாளங்களுடன் தாயக மண்ணில் சுயாட்சி அதிகாரத்திற்காகப் போராடுவதும் அதைப்பற்றிப் பேசுவதும் மட்டுமே தமிழினச் சுதந்திரத்திற்கான மார்க்கமாக இருக்க முடியும். பெரிதாகச் சிங்கள-பௌத்தம் பேசியபடி கெட்டித்தனமாகச் சிங்கள இனத்தையே அடக்கியாளும் அரசுடன் தமிழினத்தின் சுதந்திரம் பற்றிப் பேசுவதும் அப்பேச்சில் நம்பிக்கை வைப்பதும் வீண்.

சுதந்திரத்தை அடைய என்ன செய்ய வேண்டும்?
சுயாட்சி எந்த வடிவத்தில் அமைய வேண்டும் ?

இதை நிர்ணயம் செய்யும் உரிமை தமிழினத்திற்கு மட்டுமே உரியது. அரசோ அந்நியரோ தீர்வு என்ற பெயரில் எதையாவது தமிழினத்தின்மீது திணிக்க முற்பட்டால் அது உரிமை மீறலாகும். ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும்.

தமிழினம் தனது தலைவிதியைத் தானே தீர்மானிக்கும் உரிமையாம் சுயநிர்ணய உரிமையை விட்டுக் கொடுக்காமல் தனது சுதந்திரப் போராட்டத்திற்கான ஆதரவையும் அங்கீகாரத்தையும் எவரிடமிருந்தும் எந்த அரசிடமிருந்தும் பெறமுயற்சிக்கலாம். அதில் தவறில்லை.

ஆனால் இதற்குப்புறம்பாக, இனச் சுதந்திரத்தில் தலையிட அந்நியரை அழைப்பது அல்லது அனுமதிப்பது மகாதவறு. இனமக்களுக்கு இழைக்கும் துரோகம். நிற்க,

"பயங்கரவாதம் பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டும். விடுதலைப்புலிகள் அடியோடு அழிக்கப்பட வேண்டும்" என்பதை இலட்சியமாகக் கொண்டியங்குவோரும் இருக்கின்றனர். இதைப்பற்றி இப்பொழுது கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன்.

விடுதலைப்புலிகளை அடக்குவது அல்லது அழிப்பது என்பது நடைமுறைச் சாத்தியமா?

படைபல ரீதியாக அரசை விஞ்சும் வகையில், அரசே அஞ்சும் வகையில் புலிகள் வளர்ந்துவிட்டார்கள். தாக்கித் தகர்க்கும் தற்கொலைப்படையும் அவர்களிடம் உண்டு. இலங்கைப்படையுடன் மட்டுமல்லாமல் இந்தியப் படையுடனும் மோதிப்போதிய போரனுபவத்தைப் பெற்றிருக்கின்றனர். இந்த 2000 ஆண்டினை யுத்த ஆண்டாகப் புலிகள் பிரகடனம் செய்துள்ளனர்.

அப்படியே அரசைத் திரும்பிப் பார்க்கிறேன். கடன் வழங்குவோர் அனைவரும் இவ்வருடம் கைவிரித்துவிட்ட காரணத்தால், யாருக்குச் சேவகம் செய்வது? யாரைப்பாதுகாப்பது? யாருக்குப் பதில் சொல்வது? யாரிடம் பணம்பெறுவது? என்று தெரியாமல் அரசுக்கு ஓரே குழப்பம், "யுத்தத்தைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீவிரப்படுத்து'' எனப் பௌத்தவாதிகளின் ஆர்ப்பரிப்பு ஒருபுறம். "யுத்தத்துக்கு முடிவுகட்டு'' என வல்லரசுகளின் ஆணை மறுபுறம். இரண்டுக்கும் நடுவே இரண்டுங்கெட்ட நிலையில் அரசு -' ஐயோ பாவம்'. இது போதாதென்று யுத்தத்தின் பக்க விளைவாகப் பிறப்பெடுத்த 'பாதாள உலகம்' விஸ்வரூபமெடுத்து அரசை அச்சுறுத்துகிறது. ஆகமொத்தம், அரசு-இயந்திரம் ஆட்டம்கண்டு விட்டது. சுயபலம் இழந்து திணறும் அரசினால் விடுதலைப்புலிகளை அடக்கவோ அழிக்கவோ முடியுமா?

ஆயுதமேந்திய தமிழ் இயக்கம் உருவான வரலாற்றுக் காரணத்தை முன்னரே சொல்லிவிட்டேன். அக்காரணம் அப்படியே இருக்கும்வரை அல்லது முற்றாக அற்றுப்போகும்வரை ஆயுதமேந்திய தமிழ் இயக்கமும் இருந்தே தீரும். தமிழினச் சுதந்திரத்தை அங்கீகரிக்காமல் ஆயுதமேந்திய தமிழ் இயக்கத்தை அழித்துவிடலாம் என நினைப்பது முட்டாள்தனம். அழிந்துவிடும் என நம்புவதும் முட்டாள்தனம். இதை உணராமல் இலங்கை அரசுப்படைகளுடன் உலகின் அனைத்து அரசுப்படைகளும் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கெதிராகப் போரிடநேர்ந்தாலும் அவ்வியக்கத்தை அழித்துவிட யாராலும் முடியவே முடியாது.

இறுதியாக இலங்கை அரசிடம் இரண்டு கேள்விகள்:

1. அதிரடி ஆயுதக்கிளர்ச்சிமூலம் ஆட்சிபீடமேறிய பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான கியூபா அரசை அங்கீகரிக்க முடிந்த இலங்கை அரசுக்கு விஜேவீர தலைமைதாங்கிய ஜனதா விமுக்தி பெரமுண (ஜே.வி.பி.)ம் பிரபாகரன் தலைமைதாங்கும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பயங்கரவாதிகளாகத் தெரிவதேன்?

2. "பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க உலகளாவிய இயக்கமொன்று வேண்டும்'' என்று ஐ.நா.சபையில் குரலெழுப்பும் இலங்கை அரசு, அண்மையில் இராணுவச் சதிமூலம் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்ட ஜெனரல் முஷர.்.ப் தலைமையிலான பாகிஸ்தான் அரசுடன் உறவை முறித்துக் கொள்ள முன்வராததேன்? மாறாக, உதவிகேட்டு உறவாட முனைவதேன்?

இவற்றுக்கான பதிலை அரசு சொல்லாவிட்டாலும் அரசை ஆதரிப்போராவது சொல்லட்டும். நிற்க,

சுயாட்சி ஒன்றுக்காகப்போராடும் விடுதலைப் புலிகளை பக்கச்சார்போ பழியுணர்ச்சியோ அற்று விமர்சனத்துக்குட்படுத்துவது காலத்தின் கட்டாயம்.

சுயாட்சி அதிகாரத்தை விட்டுக்கொடுக்க விரும்பாத அரசுடன் பிடிவாதமாகப் போராட்டம் நடாத்துவது; சமாதானம் எனும் பெயரில் சரணடைய விரும்பாமல் சமரசத்தை வெறுத்துச் சுதந்திரத்தை நேசிப்பது போன்ற நற்குணாம்சங்கள் புலிகளிடமுள்ள அதேவேளை அவர்களின் செயற்பாடுகளில் விமர்சிக்கத்தக்க அம்சங்களும் உண்டு.

புலிகள், பயங்கரவாதிகளா? பாசிசவாதிகளா? விடுதலைப் போராளிகளா?

இவைபற்றி உள்ளூரிலும் உலகளவிலும் ஆட்கள்மத்தியிலும் அரசுகள்மத்தியிலும் பெருங் கருத்துமோதல் இடம்பெற்று வருகின்றது. இதுவரை காத்துவந்த மௌனத்தைக் கலைத்து விடுதலைப்புலிகள் இவ்விடயத்தில் அக்கறை கொள்ளவேண்டும். சற்றும் தயங்காமல் தம்மைச் சுயவிமர்சனத்துக்குட்படுத்த வேண்டும்.

தமிழினச் சுதந்திரத்தை அங்கீகரிக்கும் சிங்களத்தோழர்களின் கைகளைக் கட்டி, பௌத்த-சிங்களவாதிகளின் கைகளைக் கட்டவிழ்த்துவிட்ட தென்னிலங்கைத் தாக்குதல்கள் இனியும் தொடருமா? தொடரத்தான் வேண்டுமா? இதை விடுதலைப்புலிகளின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்